# யக்ஷப் ப்ரஸ்னம்--பகுதி-2

By London Swaminathan

Post No.788 Date 14-01-2014

## <u>யக்ஷப் ப்ரஸ்னம்:123 கேள்விகள்- பகுதி-2</u>

Please read part 1 before reading this part 2.

**31.லாபங்களுள் எது உத்தமமானது?**

நோயின்மை (Health is wealth; Good health is a Bonus).

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது தமிழ் பழமொழி.

சுவரை வைத்துதான் சித்திரம் எழுதவேண்டும்–அதாவது உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் தர்மார்த்த காம மோக்ஷத்தை அடைய முடியும். இதனால்தான் சுவாமி விவேகாநந்தர் பகவத் கீதை படிப்பதை விட இளைஞர்கள் கால் பந்து விளையாடுவதையே நான் விரும்புகிறேன்

என்றார்.

"First of all, our young must be strong. Religion will come afterwards. Be strong, my young friends; that is my advice to you. You will be nearer to Heaven through foot ball than through study of Gita"

''There are hundreds of thousands of microbes surrounding us, but they cannot harm us unless we become weak, until the body is ready and predisposed to receive them. There may be a million microbes of misery floating about us. Never mind! They dare not approach us, they have no power to get a hold on us, until the mind is weakened. This is the great fact: strength

is life. Weakness is death. Strength is felicity, life eternal, and immortal. Weakness is constant strain and misery: weakness is death''—சுவாமி விவேகாநந்தா.

''உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பே ஆலயம்'' என்பார் திருமூலர்.

**அவ்வையார் கூற்று**:

''அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிடர் ஆதல் அரிது
மானிடராயினும் கூன், குருடு செவிடு
பேடு நீக்கிப் பிறத்தல் அரிது''.

''பலமற்றவனால் ஆத்மாவை அடைய முடியாது'' என்று முண்டகோபநிஷத் முழக்கம் இடுகிறது:

"To His chosen the Atman reveals His glory. The Atman is not reached by the weak, or the careless, or those who practice the wrong austerity (20); but the wise who strive in the right way lead their soul into the dwelling of Brahman."----------Mundakopanishad

**32.சுகங்களுள் உத்தமமானது எது?**

திருப்தி (satisfaction or Content is happiness).

''போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து'' என்பது ஆன்றோர் வாக்கு.

Here is a A Sanskrit Golden Saying:

सन्तोषः परमो लाभः सत्सङ्गः परमा गतिः ।

विचारः परमं ज्ञानं शमो हि परमं सुखम् ॥

Contentment is the highest gain,
Good Company the highest course,
Enquiry the highest wisdom,
Peace the highest enjoyment.

“Contentment is natural wealth, luxury is artificial poverty.” – Socrates/சாக்ரடீஸ்

“He who is not contented with what he has, would not be contented with what he would like to have.” ---- Socrates/ சாக்ரடீஸ்

Health is the greatest possession. Contentment is the greatest treasure. Confidence is the greatest friend. Non-being is the greatest joy—Lao Tzu

“Many people lose the small joys in the hope for the big happiness.” –Peral S.Buck/ பேர்ள் எஸ்.பக்

**33.எது உலகத்தில் சிறந்த தருமம்?**

அஹிம்சை (Non Violence is the Best one can easily do)

வள்ளுவர் ‘கொல்லாமை’, ‘புலால் மறுத்தல்’ என்ற இரண்டு அதிகாரங்களில் 20 குறள்களில் அஹிம்சையை வலியுறுத்துகிறார். அவருக்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கண்ண பிரான் 26 தெய்வீ ககுணங்களைப் பட்டியல் போட்டதில் அஹிம்சையே முதலிடம் பெறுகிறது.

இரண்டையும் பற்றி ஏற்கனவே எழுதிவிட்டேன்:

1. “நீங்களும் கடவுள் ஆகலாம்”- திருவள்ளுவர் (Post 726, posted on Nov.29,2013)

2. கண்ணன் கூறும் 26 தெய்வீ ககுணங்கள் (Post 727, posted Nov.30, 2013)

3. Krishna’s List of 26 Divine Qualities! (post 721 Dt.24/11/13)

**34.எந்தத் தருமம் எப்பொழுது பயனுள்ளது?**

மூன்று அக்னிகளால் செய்யப்படுவது (Three Fires)

ஆகவனீயம், கார்கபத்யம், தக்ஷிணாக்கினீயம் என்று நாள்தோறும்

அந்தணர் வணங்கும் முத்தீயை சங்க இலக்கியங்களும் போற்றுகின்றன.

தமிழர்கள் ஒற்றுமையாக இருப்பது மிகவும் அபூர்வம். பெருநற்கிள்ளீ என்பவன் மாஹாபாரத்தில் தருமன் செய்தது போல மாபெரும் ராஜசூய யக்ஞம் செய்கிறான். அதற்கு சேரன் மாரிவெண்கோவும் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் வந்தனர். மூவரும் பிரம்மாண்டமான மேடையில் அரசியல் கூட்டணித் தலைவர்கள் தேர்தல் கூட்டத்தில் பேசுவதுபோல அமர்ந்திருந்தனர். அதைக் கண்ட அவ்வையார் அசந்தே போனார். அந்தணர் வீட்டுமுத்தீ போல இருக்கிறதே என்று உவமை கூறி வியந்து பாடுகிறார். உங்கள் ஒற்றுமை இன்று போல என்றும் வாழ்க என்கிறார் (புறம் 367)

புறநானூறு 367, பரிபாடல் 5-42

**35.எதை அடக்கினால் துயரம் அடைய மாட்டார்கள்?**

மனத்தை அடக்கினால் துயரம் அடைய மாட்டார்கள்.

One who controls mind will never get distressed

கேள்வி 33-ல் உள்ள 26 குணங்களில் இதும் ஒன்று.

**36.எவர்களோடு ஏற்பட்ட நட்பு குறைவு அடையாது?**

சாதுக்களோடு ஏற்பட்ட நட்பு குறைவு அடையாது.

கீழ்கண்ட கட்டுரையில் விவரம் காண்க:

1.இனியது கேட்கின் தனிநெடு வேலோய்! post No. 753 dated 21st December 2013

2.Sath Sangathve Nissangathvam…. post No. 754 dated 21st December 2013

यदा किञ्चिज्ज्ञोऽहं द्विप इव मदान्ध: समभवम्
तदा सर्वज्ञोऽस्मीत्यभवदवलिप्तं मम मन:।
यदा किञ्चित्किञ्चिद्बुधजनसकाशादवगतं
तदा मूर्खोऽस्मीति ज्वर इव मदो मे व्यपगत:॥

பர்த்ருஹரி கூறுகிறார்:

பொருள்: கொஞ்சம் படித்தவிட்டு (கர்வம் என்னும்) மதம் பிடித்த யானை போலத் திரிந்தேன். நான் எல்லாம் அறிந்தவன் என்று நினைத்தேன். கற்று அறிந்த பெரியோர் தொடர்பு வந்த பின்னர் காய்ச்சல் விலகியது போல என் கர்வம் நீங்கியது. நான் எவ்வளவு முட்டாள் என்று அறிந்தேன்

English translation of Sanskrit quote :

When I had little knowledge, I had become blind by pride like an elephant (during rut). Then my mind was proud, thinking that I am an omniscient. As and when I realized bit by bit in the association of wise men, my pride waned like a fever, as I came to know that I was a fool, actually.

இதை திருவள்ளுவரும் கூறுகிறார்

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்

செறிதோறும் சேயிழை மாட்டு (குறள் 1110)

பொருள்: இந்தப் பெண்ணைக் காதல் செய்ய செய்யத் தான் இன்பம் எவ்வளவு துய்க்காமல் இருந்தேன் என்று உணருகிறேன். இது எப்படி இருக்கிறதென்றால் நல்ல நூல்களைப் படிக்கும் போதுதான் நான் இவ்வளவு நாள் எவ்வளவு முட்டாளாக இருந்தேன் என்று அறிந்ததைப் போல இருக்கிறது.

जाड्यं धियो हरति सिञ्चति वाचि सत्यं

मानोन्नतिं दिशति पापमपाकरोति।

चेत: प्रसादयति दिक्षु तनोति कीर्तिं

सत्संगति: कथय किं न करोति पुंसाम् ।।

English Translation of Sanskrit Quote:

It removes the lethargy of the intellect, sprinkles (invests) truth in the speech, enhances the greatness and casts off sin, it clarifies the mind and spreads the fame all around; tell me what the company of the high-souled persons does not provide the man?

பொருள்: உயர்ந்தோர் தொடர்பு எதைத்தான் கொடுக்காது? பேதமையை நீக்கும்; வாக்கினிலே ஒளி உண்டாக்கும்; பாவத்தைப் போக்கும்; பெருமையை அளிக்கும்; மனதைத் தெளிவாக்கும்;புகழ் மணம் பரப்பும்.

**37.எதை விட்டால் மனிதன் மற்றவர்க்குப் பிரியனாகின்றான்?**

கர்வத்தை (Don't be arrogant; everyone will love you)

**38.எதை விட்டால் துயரம் அடைவதில்லை?**

கோபத்தை ( Never be angry; you will never have worries)

**39.எதை விட்டால் பொருள் உள்ளவனாகின்றான்?**

காமத்தை (Never feel lust; you are the richest in thinking)

**40.எதை விட்டால் சுகமுள்ளவன் ஆகின்றான்?**

பேராசையை (உலோபத்தை)

37 முதல் 40 வரையுள்ள கேள்விகளுக்கான விடை மேலே குறிப்பிட்ட 'நீங்களும் கடவுள் ஆகலாம்' என்ற கட்டுரையில் உள்ளது.

**41. எதற்காகப் பிராமணனுக்குக் கொடுக்க வேண்டும்?**

தருமத்துக்காக

வள்ளுவன் பிராமணர்கள் பற்றி நிறைய இடங்களில் கூறுகிறான்:

அந்தணர் என்போர் அறவோர்.........................(30)

அந்தணர் நூற்கும் அறத்திற்கும்................................................ (543)

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்......................(560)

அவிசொரிந்து ஆயிரம்.................................(259)

மறப்பினும் ஒத்துக் கொளல் ஆகும் பார்ப்பான்..............................(134)

நிறைமொழி மாந்தர்.................................. (28)

சங்க இலக்கியத்தில் பிராமணர்கள் பெற்ற மதிப்பு, மரியாதைகளை ஏற்கனவே எழுதிவிட்டேன்.

1.No Brahmins, No Tamil

2. Why do Brahmins deserve an entry into Guinness Book of World Records

உலகிலேயே மிகப்பெரிய கதைத் தொகுப்பான கதா சரித் சாகரத்தில் கீழ்கண்ட பொன்மொழிகள் உள்ளன:

Brahmanas are always soft hearted (Story of Vararuci)=குறள் 30

Brahmanas can accomplish all things in the world by means of ceremonies in accordance with the scriptures (Story of Devasmita)= குறள் 28

**42. எதற்காக நடிகனிடம் தருவது?**

புகழுக்காக.

**44.எதற்காக வேலைக்கரனிடம் தருவது?**

வசப்படுத்துவதற்காக

**45.எதற்காக அரசனிடம் தருவது?**

பயம் நீங்குவதற்காக

வள்ளுவன் அரசர்கள் பற்றி நிறைய இடங்களில் கூறுகிறான்:

1.குடிபுறம் காத்து ஓம்பி குற்றம் கடிதல்............549

2.கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல்............550

**46.எதனால் உலகம் மூடப்பட்டிருக்கிறது?**

அஞ்ஞானத்தால் (World is covered/concealed with ignorance.

**47.எதனால் உலகம் பிரகாசிப்பதில்லை?**

தமோ குணத்தால்.

**48.எதனால் மனிதன் சுவர்க்கத்தை அடைவதில்லை?**

பற்றினால்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு.......................... திருக்குறள் 350

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்

ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்

ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்

ஆசை விடவிட ஆனந்தமாமே ----------(திருமந்திரம்)

49.எதனால் மனிதன் நண்பர்களை விடுகிறான்?

உலோபத்தால் (பேராசை)

**50.மனிதன் எவ்வாறானால் மாண்டவன் ஆகின்றான்**?

வறுமையால்

அவ்வையார் கூறுகிறார்:

“கொடிது கொடிது வறுமை கொடிது

அதனினும் கொடிது இளமையில் வறுமை”.

Poverty is equal to death

Riches pass away like an autumn cloud (Vetla Atory 22)

Wealth, like an unreasonable cloud, suddenly comes and goes (Story of King Prasena jit)

Those that have lost their wealth die daily, not so those that behave lost their that have lost their breath (Story Of Sundarasena and Mandaravati)

It is better to be an old barren tree in the world or a stone than as a poor man (Story of Ratnaprabha)

For a proud man, death is preferable to exhibiting poverty before one’s relations (Story of Devadasa)

Please read my earlier post ‘The Largest Story Collection in the World’ in this blog.

**51.ராஜ்யம் எவ்வாறானால் உயிர் இல்லாததாகும்?**

அரசன் இல்லாததால்

**52.வேள்வி எவ்வாறானால் பயன் இல்லாததாகும்?**

தட்சிணை இல்லாததால்.

53.சிரார்த்தம் எவ்வாறானால் அழிந்ததாகும்?

வேத அத்தியனம் செய்யாத வேதியர்களை வைத்துச் செய்வதனால்

**54.எது திக்கு?**

சாதுக்கள்

தமிழில் திக்குமுக்காடிப் போனேன் என்பர். திக்கற்றவர்க்கு தெய்வமே துணை என்றும் சொல்லுவர்.

**55.எது நீர்?**

ஆகாயம்.

திருவள்ளுவரும் இதே சொல்லை இரண்டாவது அதிகாரத்திலேயே (வான் சிறப்பு= ஆகாய விஷேசம்) பயன்படுத்துகிறார். ஆகாயத்தில் இருந்து மழை கொட்டுவதால் இப்படிப் பதில் சொன்னதாகக் கருதுகிறேன்.

**56.எது விஷம்?**

பெரியோர்களின் பொருள் (Never covet great man’s or temple or public property; It will kill you like poison)

‘சிவன் சொத்து குல நாசம்’-- என்பது தமிழ் வழக்கு.

கோவில் அல்லது மடங்களின் சொத்துகளைத் திருடுவோர் வேருடன் சாய்வர் என்ற கருத்தில் தருமன் இப்படிச் சொன்னான் போலும்.

**57.எது சிரார்த்ததுக்கு காலம்?**

பிராம்மணன் (கிடைக்கும் நேரம்)

**58.எது தவம்?**

ஸ்வதர்மத்தைச் செய்வது

கீதை கூற்று:- ஸ்வதர்மம் (2-31,33;3-35, 18-47)

ஸ்வதர்மம் ஸ்ரேயான்= தன்னுடைய தர்மமே சிறந்தது

ஸ்வதர்மம் நிதனம் ஸ்ரேய:= தன்னுடைய தர்மத்தில் மரணமும் சிறந்தது

என்று கிருஷ்ணன் கூறுகிறார் (3-35)

**59.எது சிறந்த பொறுமை?**

சுக துக்கங்களைப் பொறுத்துக் கொண்டிருத்தல்

**60.எது தர்மம்?**

மனத்தை அடக்குதல்.

**61.எது நாணம்?**

செய்யத் தகாத காரியங்களைச் செய்யாதிருத்தல்

**62.எது ஞானம்?**

உண்மைப் பொருளை நன்கு அறிதலே ஞானம்

**63.எது சமம்?**

சித்தத்தில் நல்ல சாந்தி அடைதல் சமம் (Equanimity)

**64.எது சிறந்த கருணை?**

எல்லோருக்கும் சுகத்தை விரும்புதல்

Lokas samastha sukino Bhavantu ellorkkum inpam

Thaam inpuruvathu kaNtu

சாஸ்வதஸ்ய ஸுகஸ்ய ச= ஒப்புயர்வில்லாத பேரின்பம்14-27

ஸர்வே பவந்து சுகின: (வேத மந்திரம்)

கேள்வி 67–க்கான பதிலையும் காண்க.

**65.மனிதர்களால் வெல்ல முடியாத பகைவன் யார்?**

கோபம்( Anger is the unconquerable/invincible enemy)

**66.எது முடிவில்லாத நோய்?**

லோபம்/ பேராசை (Greediness is a Terminal disease)

**67.எப்படி இருப்பவன் சாது?**

எல்லா உயிர்களிடத்திலும் இதமாக இருப்பவன்.

(பகவத் கீதையில் சர்வ பூத ஹிதே ரதா: 12-4, 11-55, 9-29, 5-25 என்ற சொற்றொடர் வருகிறது)

‘எல்லா உயிர்க்கும் இன்பம்’ என்கிறார் தொல்காப்பியர்.

‘எல்லோரும் இன்புற்றிருப்பதே அன்றி யாம் ஒன்றும் அறியோம் பராபரமே’ என்கிறார் தாயுமானவர்

‘இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை’ என்கிறார் அப்பர் பெருமான்

‘மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்’ என்கிறார் சம்பந்தர்

ஆழ்க தீயது எல்லாம்;அரன் நாமமே சூழ்க; ‘வையகமும் துயர் தீர்கவே’ என்பர் சம்பந்தர்.

‘கொள்ள மாளா இன்பவெள்ளம் கோது இல தந்திடும் என் வள்ளலேயோ’ என்கிறார் நம்மாழ்வார் (திவ்ய.3298)

‘தழை நல்ல இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே’ என்கிறார் நம்மாழ்வார் (திவ்ய.3834)

‘ஆராதே இன்பம் அருளும் மலை போற்றி’ என்பார் மாணிக்கவாசகர்.

‘நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்பார் திருமூலர்.

‘நாமும் கதையை முடித்தோம்

நாநிலம் இன்பத்தில் வாழ்க’ என்று பாஞ்சாலி சபதத்தை முடிக்கிறார் பாரதியார்.

‘ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள், உலகு இன்பக் கேணி’ என்று நல் பல் வேதம் வரைந்த கை என்று பாரதியார் கூறுகிறார்.

‘மன்னுயிர்க்கெல்லாம் இனிது,,இன்பம்’ என்பார் (68, 369) வள்ளுவர்.

**68.எப்படிப்பட்டவன் அசாது?**

தயை அற்றவன்

மேற்கூறிய பொன்மொழிகளே இதற்கும் பொருந்தும்.

பாரத சிந்தனை இமயம் முதல் குமரி வரை ஒன்று!!!

**69.எது மோகம்?**

தருமத்தை அறியாமை

**70.எது மானம்?**

நான் எனும் அகங்காரம்

Add Kural yaan enathu ennum

**71.எது சோம்பேறித்தனம்? Laziness**

தருமத்தைச் செய்யாமை

**72.எது சோகம்?**

அஞ்ஞானம்

**73.எது ஸ்நானம்?**

மன அழுக்கைப் போக்குதல்

பாரதி பாட்டு:-

துணி வெளுக்க மண்ணுண்டு–எங்கள்

முத்து மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

தோல் வெளுக்க சாம்பலுண்டு–எங்கள்

முத்து மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

மணி வெளுக்க சாணையுண்டு–எங்கள்

முத்து மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

மனம் வெளுக்க வழியில்லை–எங்கள்

முத்து மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

என்று பாடி மாரியம்மாவைச் சரண்புகுந்தோம் என்று முடிக்கிறார். இறைவனின் திருப்பாதங்களை எண்ணிச் சரணடைவதே மன்ம் வெளுக்க ஒரே வழி!

**74.பிறப்பு / இறப்புக்கு காரணம் எது?**

ஆசை.

ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்பது புத்தரின் முக்கிய போதனை. Desire is the root cause of evil: Buddha.

எதில் எதில் பற்று விட்டுப் போகிறதோ அதில் அதில் இருந்து துன்பம் இல்லை என்பது வள்ளுவன் சொன்ன உண்மை:-

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்

அதனின் அதனின் இலன் (341)

**75.எவன் அழிவில்லாத நரகத்தை அடைகிறான்?**

பொருள் இருந்தும் பிறருக்குக் கொடுக்காமலும், தானும் அநுபவிக்காமலும், யாசிக்கின்றவனுக்குத் தருகிறேன் என்று சொல்லி பிறகு இல்லை என்று சொல்பவன் அழிவில்லாத நரகத்தை அடைகிறான்.

One who is a miser and cheat will go to a hell that is a bottomless pit. It is very difficult to get out of it.

**76.பிராமணத்துவம் எதனால் உண்டாகின்றது? குலத்தினாலா? ஒழுக்கத்தினாலா? வேதம் ஓதுவதாலா? சாஸ்திர ஞானத்தினாலா?**

பிராம்மணத்துவத்திற்குக் குலமும் வேதம் ஓதுதலும் சாஸ்திரப் பயிற்சியும் காரணம் ஆகாது. ஒழுக்கமே காரணம்.

மறப்பினும் ஒத்துக்கொளல் ஆகும், பார்ப்பான்

பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும் (திருக்குறள் 134)

**77.இன்சொல் சொல்கின்றவன் எதை அடைகின்றான்?**

எல்லோருக்கும் அன்பன் ஆகின்றான்

சிறுமையில் நீங்கிய இன்சொல் மறுமையும்

இம்மையும் இன்பம் தரும் (குறள் 98)

இன்சொல் சொன்னால் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் எய்தலாம் என்பது வள்ளுவன் வாக்கு.

**78.ஆராய்ந்து காரியத்தைச் செய்கின்றவன் எதை அடைகின்றான்?**

வெற்றியை

(எண்ணித் துணிக கருமம் -குறள் 467)

**79.பலரை நண்பர்களாக்கிக் கொள்கின்றவன் எதை அடைகின்றான்?**

சுகத்தை அடைகின்றான்.

பஞ்ச தந்திரங்களில் ஒன்று நட்பு ஏற்படுத்தல் (மித்ர சம் ப்ராப்தி)

**80.தருமத்தில் பற்றுள்ளவன் எதை அடைகின்றான்?**

நல்ல கதியை.

**81.திரும்பப் பெற முடியாதது எது?**

வீ ணாகக்கழிந்த நாட்கள் (Every minute gone is gone for ever).

**82.எவன் மகிழ்ச்சியை அடைகின்றான்?**

எந்த மனிதன் கடன் இல்லாதவனாகவும், அயலூர் போகாதவனாகவும், பகலில் ஐந்தாவது காலத்திலோ ஆறாவது காலத்திலோ கீரையையாவது சமைத்து உண்கின்றானோ அவன் மகிழ்ச்சி அடைகின்றான்.

**83.எது ஆச்சரியம்?** Most Wonderful thing in the world

**தினந்தோறும் இறப்பவர்களைக் கண்டும் அது நம்மக்கு இல்லை என்று எண்ணி இருக்கின்றார்களே! அதுதான் ஆச்சரியம்.**

Read my article "Most Amazing Thing in the World"

**84.எது வழி?**

**ஆன்றோர்கள் செல்லும் வழிதான் சரியான வழி.**

கீதையில் கண்ணன் கூறுகிறான்(3-21): பெரியோர்கள் எதை எதைப் பின்பற்றுகிறார்களோ அதையே ஏனைய மக்களும் பின்பற்றுகின்றனர்.

புறம்: 186(மோசிகீரனார்), 187(அவ்வையார்)
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம்: 186)

எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை: வாழிய நிலனே (புறம்: 187)

ஆடவர் (மக்கள் )நல்லவராக இருந்தால் நிலனும் நல்ல பலன் தரும். நல்லவரை எல்லோரும் பின்பற்றி உழைக்க நிலன் பலன் தரும் தானே. வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே (தொல்.பொருள் 647).

**85.எது தினமும் நடக்கின்ற நிகழ்ச்சி?**

**பூமியானது சமையல் செய்யும் பாண்டம்.ஆகாயம் அதற்கு மேல் மூடி.காலமானது சராசரங்களை எல்லாம், அதில் இட்டு, இரவு பகலாகிய விறகை வைத்து, சூரியனாகிய நெருப்பை மூட்டி, மாதம், ருது என்னும் கரண்டிகளால் கிளறிப் பக்குவம் செய்கின்றது என்பதுதான் தினமும் நடந்து வருகின்ற நிகழ்ச்சி.**

தொடரும் (மூன்றாம் பகுதியில் காண்க) swami_48@yahoo.com